தொடங்குவதற்கு முன்பாக காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டு உள்ளது.

காவிரி நீர் பங்கீடு தொடர்பாக நடுவர் மன்றம் வழங்கிய இறுதி தீர்ப்பை செயல்படுத்த ‘ஸ்கீம்’ (செயல் திட்டம்) ஒன்றை 6 வாரத்துக்குள் ஏற்படுத்துமாறு மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட் கடந்த பிப்ரவரி 16ந்தேதி உத்தரவிட்டது. ஆனால் அந்த உத்தரவு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நிறைவேற்றப்படாததால், மத்திய அரசுக்கு எதிராக தமிழகம் மற்றும் புதுச்சேரி அரசுகள் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் கோர்ட் அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கை விசாரித்து நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவை தொடர்ந்து, மத்திய நீர்வளத்துறை செயலாளர் கடந்த 14ந்தேதி சுப்ரீம் கோர்ட்டில் நேரில் ஆஜராகி வரைவு செயல்திட்டத்தை கோர்ட்டில் தாக்கல் செய்தார்.

அந்த வரைவு செயல்திட்டத்தில் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களுக்கு இடையே காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பாக, நீர்வளம் மற்றும் நீர் மேலாண்மையில் செயல்திறன் கொண்ட பொறியாளர் தலைமையில் 10 பேர் கொண்ட வாரியம், ஆணையம் அல்லது குழு அமைக்கப்படும் என்றும், இதன் தலைமையகம் பெங்களூருவில் இயங்கும் என்றும், மேலும் காவிரி ஒழுங்காற்று குழுவும் அமைக்கப்படும் எனவும் கூறப்பட்டு இருந்தது. இந்த இரு குழுக்களின் பணிகள் பற்றியும் அதில் விரிவாக குறிப்பிடப்பட்டு இருந்தது.

## கோதாவரி போல...

இந்த வரைவு செயல்திட்டம் தொடர்பான தங்கள் கருத்துகள் அடங்கிய அறிக்கைகளை தமிழகம், கேரளா, புதுச்சேரி மாநிலங்கள் கடந்த 16ந்தேதி சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்தன.

அப்போது தமிழக அரசு தரப்பில் “வாரியம்” என்று அழைக்கவேண்டும் என்று இந்த அமைப்பின் தலைமையகத்தை பெங்களூருக்கு பதிலாக டெல்லியிலும் காவிரி ஒழுங்காற்றுக் குழுவை பெங்களூருவிலும் அமைக்கலாம் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டது. கேரளா தரப்பில் தண்ணீர் திறக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு வழங்காமல் அமைப்பிடமே இருக்க வேண்டும் என்பன உள்ளிட்ட சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதைத்தொடர்ந்து, சுப்ரீம் கோர்ட் உத்தரவின் பேரில் திருத்தம் செய்யப்பட்ட வரைவு அறிக்கையை மத்திய அரசின் சார்பில் அட்டார்னி ஜெனரல் கே.கே.வேணுகோபால் நேற்று முன்தினம் தாக்கல் செய்தார். அதன் நகல்கள் அனைத்து மாநில அரசுகளின் வக்கீல்களுக்கு வழங்கப்பட்டன.

மத்திய அரசு தாக்கல் செய்த திருத்தப்பட்ட வரைவு செயல்திட்டத்தில் கீழ்க்கண்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## டெல்லியில் தலைமையகம்

★ காவிரி நீர் பங்கீட்டை செயல்படுத்தும் அமைப்பு “காவிரி நீர் மேலாண்மை ஆணையம்” என்று அழைக்கப்படும்.

★ ஆணையத்தின் தலைமையகம் டெல்லியில் இருக்கும்.

★ கர்நாடகம், தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநில அரசுகளில் ஏதேனும் ஒன்று ஆணையத்துக்கு ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்றால் ஆணையம் மத்திய அரசின் உதவியை நாடலாம்.

இவ்வாறு திருத்தப்பட்ட வரைவு செயல்திட்டத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, நீதிபதிகள் ஏ.எம்.கன்வில்கர், டி.ஒய். சந்திரசூட் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் தங்கள் இறுதிதீர்ப்பை

## நீர் இருப்பு

நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறி இருப்பதாவது:

மத்திய அரசு தாக்கல் செய்த திருத்தப்பட்ட வரைவு செயல்திட்டம் அதன் முழு வடிவத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இந்த திருத்தப்பட்ட வரைவு திட்டத்தில் சில மாற்றங்கள் கோரி கர்நாடகம் மற்றும் கேரள மாநில அரசுகள் முன்வைத்த கோரிக்கைகள் நிராகரிக்கப்படுகின்றன.

இந்த வரைவு செயல்திட்டத்தில் அணைகளின் கொள்ளளவு, நீர் இருப்பு, பங்கீடு மற்றும் மாநிலத்தின் தேவை குறித்த விவரங்களை ஆணையத்துக்கு அளிக்க வழிவகை செய்வது மாநிலங்களின் உரிமையில் குறுக்கிடுவதாக அமையாது. நீர்ப்பங்கீடு தொடர்பான காவிரி நடுவர் மன்றத்தின் உத்தரவில் சில மாற்றங்கள் செய்து சுப்ரீம் கோர்ட் பிப்ரவரி 16ந்தேதி வழங்கிய தீர்ப்பு ஆணையம் திறம்பட செயல்படும் வகையில் அமையும்.

நீர்ப்பங்கீடு தொடர்பாக மாநிலத்தின் உரிமைகளை இந்த ஆணையம் மேலும் வலுப்படுத்தும். இந்த ஆணையம் முழு அதிகாரம் படைத்த ஆணையமாக இருந்தால்தான் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பை முறையாக அமல்படுத்த முடியும் என்று மத்திய அரசு முன்வைத்த வாதம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

## வக்கீல் நம்பியாருக்கு பாராட்டு

இந்த செயல்திட்டத்தின் மூலம் அமைக்கப்படும் ஆணையம் வெறும் உத்தரவை மட்டுமே எந்திரத்தனமாக பிறப்பிக்கும் அமைப்பாக இல்லாமல், தனது உத்தரவை முழுமையாக செயல்படுத்தும் வகையில் முழு அதிகாரம் கொண்டதாகவும் அமைய வேண்டும் என்று புதுச்சேரி அரசு தரப்பில் வாதாடிய மூத்த வக்கீல் ஏ.எஸ்.நம்பியாரை கோர்ட்


## பைவ் கோர் எக்ஸிம் லிமிடெட்

(அரும் சாப்ட் சிஸ்டம்ஸ் லிமிடெட் என்று முன்னர் அழைக்கப்பட்டது)

L32200TN1994PLCO26958

பதிவு அலுவலகம்: சிட்டி சென்டர் பிளாசா, 3வது தளம் அறை எண். 7/48, அண்ணா சாலை, சென்னை–600 002. Tel: (91) - 7042292838,

Email: manager.roc@5core.in, Website: www.fivecoreexim.com

### அறிவிப்பு

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015ன் கட்டுப்பாடு 29 மற்றும் இதர பொருந்தக்கூடிய கட்டுப்பாடுகளின்படி, 31 மார்ச் 2018ல் முடிந்த நிதி ஆண்டு மற்றும் காலாண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிக்கவும், 2017–18 நிதி ஆண்டுக்கு டிவிடெண்ட் ஏதேனும் இருப்பின் அதனை பரிசீலிக்கவும் (நடைபெற உள்ள வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்களின் ஒப்புதலுக்குட்பட்டு) கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டம் **புதன்கிழமை, 30 மே, 2018 அன்று மாலை 04.30 மணிக்கு (இந்திய நேரப்படி) கம்பெனியின் கார்ப்பரேட் அலுவலகம், டபிள்யூஇசட் 15பி/1, அறை எண். 203–204, உக்கர்செயின் மார்க்கெட், அசோக் நகர், திலக் நகர், புதுடெல்லி– 110 018ல்** நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேலும், குழு கூட்டத்திற்கு முன்னதாக நடைபெறும் தணிக்கை குழு கூட்டத்தில் நிதிநிலை முடிவுகளை தணிக்கை பரிசீலித்து ஆராயும்.

மேலும், செபி (உள்வர்த்தகம் தடை) விதிகள் 2015ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் உள்வர்த்தகர்களின் ஒழுங்குபடுத்துதல், கண்காணிப்பு மற்றும் அறிக்கை நடத்தை விதி தொகுப்பின்படி, கம்பெனியின் ஈக்விடி பங்குகள் வர்த்தகம் வெள்ளிக்கிழமை 18 மே, 2018 முதல் வெள்ளிக்கிழமை, 1 ஜூன், 2018 முடிய (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும். அதாவது ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தணிக்கையான நிதிநிலை முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 48 மணி நேரங்கள் கழித்து. இவை அனைத்து இயக்குனர்கள், கேஎம்பீஎஸ் மற்றும் கம்பெனியின் நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி

பைவ் கோர் எக்ஸிம் லிமிடெட்டுக்காக

ஒப்பம்/– சுரிந்தர் கவுர் கல்ரா

நிர்வாக இயக்குனர்

தேதி: 18 மே, 2018

இடம்: சென்னை



## டாட்டியா குளோபல் வென்சர் லிமிடெட்

பதிவு அலுவலகம்: புதிய எண். 29, பழைய எண். 12, மூக்காத்தாள் தெரு, புரசைவாக்கம், சென்னை–600 007. தொலைபேசி: 044 - 48676773.

இமெயில்: : tatia@vsnl.com CIN NO. L18101TN1994PLCO26546

### அறிவிப்பு

இயக்குனர்கள் குழு கூட்டம் புதன்கிழமை, 30 மே, 2018 அன்று காலை 11.00 மணிக்கு கம்பெனியின் பதிவு அலுவலகம், புதிய எண். 29, பழைய எண். 12, மூக்காத்தாள் தெரு, புரசைவாக்கம், சென்னை–600 007ல் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

(a) 31.03.2018ல் முடிந்த ஆண்டு மற்றும் காலாண்டிற்கான தணிக்கையான கம்பெனியின் நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து பதிவு செய்தல்.

(b) கட்டுப்பாடு 12 (1/ஆப் செபி) (உள்வர்த்தகத்திற்கு தடை) கட்டுப்பாடுகள் 1992ன் கீழ் கம்பெனியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மேற்சொன்ன சுற்றறிக்கையின் நடத்தை குறியீடுகளின்படி நிறுவன நிகழ்வுகளுக்காக மே 21, 2018 முதல் ஜூன் 1, 2018 வரை (இரு நாட்களும் உள்பட) வர்த்தக சாளரம் மூடப்பட்டிருக்கும்.

(c) கம்பெனியின் சேர்மன்/இயக்குனர் திரு. எஸ். பன்னாலால் ஜெயின் டாட்டியா அவர்களின் ராஜினாமாவை பரிசீலித்து பதிவு செய்தல்.

(d) கம்பெனியின் கூடுதல் இயக்குனராக திருமதி. சந்திரகாந்தா டாட்டியா அவர்களை நியமனம் செய்தல்

(e) மார்ச் 31, 2018 முடிந்த காலாண்டு தொடர்புடைய இணக்கங்களுக்கு ஒப்புதல் அளித்தல்

குழுவின் ஆணைப்படி

டாட்டியா குளோபல் வெஞ்சர் லிமிடெட்டுக்காக

ஒப்பம்/– S.P. பரத் ஜெயின் டாட்டியா

நிர்வாக இயக்குனர்

DIN.NO.00800056

இடம்: சென்னை–600 007

தேதி: 19 மே 2018